*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC 333/2020*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court PW1(LW- 2)*

*Name / Father's Name: சண்முகம் த/பெ. குப்புசாமி*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30-06-2022*

துவக்க நேரம் 04.30

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆத்தூர் வனசரகத்தில் வனகாப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின் போது கல்வராயன் பகுதி வனகாப்பாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 08.04.2018 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் எங்களுக்கு அரசு காப்புக் காட்டிற்கு யாரோ தீ வைப்பதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கரியகோவில் பீட் பிளாக் 5 சூளாங்குறிச்சியில் நானும் , என்னுடன் பக்கத்து பீட்டை சேர்ந்த வனகாப்பாளர் கிருஷ்ணராஜ் , மற்றும் வனசரகர் ஞானராஜ் ஆகியோர்கள் சென்று பார்த்த போது காட்டில் தீ வைத்து செடி கொடிகளை வெட்டி போட்டு இருந்தார்கள். நாங்கள் பார்க்கும் போது 2 பேர் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். நாங்கள் தீயை அனைக்க முற்பட்டதால் எதிரிகளை துரத்தி செல்லவில்லை. தீயை அனைக்கவே இரவு 07.30 மணி ஆகிவிட்டது. பின்னர் அருகில் இருந்த தலைகரை கிராமத்திற்கு சென்று நடந்த சம்பவம் பற்றி விசாரித்த போது ஆஜர் எதிரிகள் பவுல்தாஸ், பாக்கியராஜ் ஆகியோர்கள் தான் காட்டில் தீ வைத்தார்கள் என்று தெரிய வந்தது. எதிரிகள் அப்போது ஊரில் இல்லை. எதிரிகளை தேடி வந்த போது 11.04.2018 ஆம் தேதி அவர்கள் தலைகரை கிராமத்திற்கு வந்து இருப்பதாக தகவல் கிடைத்தது. வனசரகர் ஞானராஜ் தலைமையில் நானும் கிருஷ்ணராஜும் அவருடன் சென்று எதிரிகளை பிடித்து விசாரித்து கைது செய்தோம். பின்னர் மேல் விசாரணைக்காக வனசரக அலுவலகத்திற்கு கூட்டி வந்தோம். எதிரிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவர்களிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தோம். மகஜர் ஸ்டேட்மென்ட், H- நமுனா, சம்பவ நடந்த இடத்தை குறிக்கும் பீட் மேப் மற்றும் வரைபடம், GPS பாயின்ட் வரைபடம் ஆகியவற்றையும் தயார் செய்தோம். சம்பவ இடத்தில் புகைபடமும் எடுத்துள்ளோம். சுமார் 4 ஏக்கர் அளவிற்கு காட்டில் பாதிப்பு ஏற்பட்டது. எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். பின்னர்

புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது அ-படிவத்தை வனசரகர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். **H- நமுனா அசாஆ.1, மகஜர் ஸ்டேட்மென்ட் அசாஆ.2, வரைபடம் அசாஆ.3, GPS பாயின்ட் குறித்த ஸ்கேட்ச் அசாஆ.4, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அசாஆ. 5, சம்பவ இட புகைபடம் அசாஆ.6 ஆகும்.**

**குறுக்கு விசாரணை**

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலும் மகஜரிலும் "இன்று 08.04.2018" என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.04.2018 ஆம் தேதி எதிரிகளை கைது செய்ததாக குறிப்பிடும் நிலையில் முன்னதாகவே 08.04.2018 ஆம் தேதி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காட்டில் ஏதோ வகையில் ஏற்ப்பட்ட தீயை கணக்கு காட்ட எதிரிகள் மீது இவ்வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எங்களது அலுவலகத்தில் வைத்தே வழக்கிற்கு ஆதரவாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் காட்டில் ஏற்பட்ட தீ விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். தனிநபர் சாட்சி தேவையில்லை என்பதால் வாங்கவில்லை.

முடிவு நேரம் 04.50

S ARUNKUMAR
Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.06.30 17:54:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்